சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – பணியமைப்பு – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – குறு அங்கன்வாடி மையப் பணியாளர் மற்றும் அனைத்து அங்கன்வாடி உதவியாளர்களை நியமனம் செய்ய மாவட்ட திட்ட அலுவலர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் {சந7(2)} துறை

அரசு ஆணை (நிலை) எண். 17

நாள் 09.02.2011.
திருவள்ளுவர் ஆண்டு 2042
தை 26

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.237, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 18.08.1994.
2. அரசு கடித எண்.8609, சஉதி2/96–1, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி2) துறை, நாள் 12.04.1996.
3. அரசாணை (நிலை) எண்.57, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி2) துறை, நாள் 18.04.2007.
4. அரசாணை (நிலை) எண்.163, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி2) துறை, நாள் 18.08.2010.

மேலும் படிக்கப்பட்டவை:-

5. மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித எண். 2064/2010/இ, நாள் 02.02.2011.
6. முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், தரமணி, சென்னை அவர்களின் கடித எண். 9803/இ3–2/2009, நாள் 07.02.2011.

+++++

ஆணை :

மேலே 1 முதல் 3 வரை படிக்கப்பட்ட அரசாணைகள் மற்றும் கடிதங்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மையங்களில் அங்கன்வாடி

பணியாளர் மற்றும் உதவியாளர் நியமனம் குறித்தும், இப்பணியிடங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர்களை நியமன அலுவலர்களாக நியமித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலே 4ல் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளி சத்துணவு மைய சமையலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) அவர்களை நியமன அலுவலர்களாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே 5ல் படிக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில், அங்கன்வாடி பணியாளர் நியமன அலுவலராக மாவட்ட ஆட்சித்தலைவர் என்றும் குறு அங்கன்வாடி மையப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகியோர் சத்துணவு திட்ட சமையலர் மற்றும் உதவியாளர் நிலைக்கு சமமாக உள்ளதால் இப்பணியிடங்களுக்கு நியமன அலுவலராக மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) பதவிக்கு இணையாக உள்ள மாவட்ட திட்ட அலுவலர் (ஒகுவதி) அவர்களை நியமன அலுவலராக நியமிக்கலாம் என தெரிவித்து உரிய ஆணை வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துருவை முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்து உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவையும் முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் பரிந்துரையையும், அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்றுக்கொண்டு பின்வருமாறு ஆணையிடுகிறது.

- மாவட்டங்களில் (சென்னை தவிர) குறு அங்கன்வாடி மையப் பணியாளர் நியமனம் மற்றும் அனைத்து அங்கன்வாடி மைய உதவியாளர் நியமனங்களை நடைமுறையில் உள்ள தேர்வுக்குழுவின் மூலம் தேர்வு செய்து பணி நியமனம் செய்ய அந்தந்த மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களுக்கு அதிகாரமளித்து ஆணையிடப்படுகிறது.

- சென்னையைப் பொறுத்தவரை குறு அங்கன்வாடி மையப் பணியாளர் நியமனம் மற்றும் அனைத்து அங்கன்வாடி மைய உதவியாளர் நியமனங்களை நடைமுறையில் உள்ள தேர்வு குழுவின் மூலம் தேர்வு செய்து பணி நியமனம் செய்ய, சென்னை மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களுக்கு அதிகாரமளித்து ஆணையிடப்படுகிறது.

- அங்கன்வாடி பணியாளர் நியமனத்தை பொறுத்தவரையில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே நியமன அலுவலராக தொடர்ந்து செயல்படுவார்கள்.

5. முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இந்த ஆணையினை கண்காணிப்பு மற்றும் ஆய்வு அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ,
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
(முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மூலமாக)

நகல்
சமூகநல இயக்குநர், சென்னை – 5.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை –3.
தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர், சென்னை –2.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

9.2.2011
பிரிவு அலுவலர்.